Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVOTTIYUR

Calendar :
Miscellaneous :
Preliminary Register : Case No. CC /25/2023
Sessions : PW1

Deposition of witness for : Prosecution
Name .. திருமதி. தேசம்

Father's Name .. திரு. பார்த்திபன்
Village
Taluk ..
Caste ..
Calling ..
Religion ..
Age .. 39 Date: 02.07.2025

(Solmenly affirmed and oath taken under Act 10 of 1872)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்போது திருவொற்றியூர் தாழங்குப்பம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். கடந்த 22.10.2022ம் வருடம் மதியம் 2.30 மணிக்கு எனது அம்மா தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எனது தம்பி ரத்தினகுமார் என்பவர் விபத்தில் காயம் பட்டு ஸ்டான்லி

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொன்ன தகவலின் பேரில், நான் ஸ்டான்லி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது தம்பி பலத்த காயங்களுடன் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கிருந்தவர்களை விசாரித்த போது ஆஜர் எதிரி விக்னேஷ் இருசக்கர வாகனத்தில் எனது தம்பியை பின்னால் உக்கரவைத்து அழைத்துக் கொண்டு வேகமாக சென்று சாலைக்கு நடுவே உள்ள தடுப்புச்சுவரில் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யபடுகிறது**). எனது தம்பி ஒரு வாரம் கழித்து சிகிச்சை பலனிற் இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.07.02 14:12:57 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்

Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC /25/2023 |
| Sessions | : | PW2 |
| Deposition of witness for | : | Prosecution |
| Name | .. | திரு. அசோக்குமார் |
| Father's Name | .. | திரு. பால்ராஜ் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 54 Date: 02.07.2025 |

(Solmenly affirmed and oath taken under Act 10 of 1872)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்போது ஒண்டிக்குப்பம் 3வது தெருவில் வசித்து வருகிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். கடந்த 22.10.2022ம் வருடம் மதியம் 01.30 மணிக்கு பலகை தொட்டிக்குப்பம் எண்ணூர் விரைவு சாலையில் நானும் ஜெகன் என்பவரும் நின்று கொண்டுயிருந்த போது ஆஜர் எதிரி விக்னேஷ் இருசக்கர வாகனத்தில்

எனது தம்பியை பின்னால் உக்கரவைத்து அழைத்துக் கொண்டு வேகமாக சென்று சாலைக்கு நடுவே உள்ள தடுப்புச்சுவரில் மோதி விபத்து ஏற்பட்டதில் இரத்தினகுமார் என்பவருக்கு பின்பக்க தலையிலும்,

ஆஜர் எதிரிக்கு மார்பிலும் காயம் ஏற்பட்டது. காயம் பட்ட நபர்களை சிகிச்சைகக்காக ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இரத்தினக்குமார் சிகிச்சை பலனின்றி ஒரு வாரம் கழித்து இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்,

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.07.02 14:13:12 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்

Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVOTTIYUR

Calendar :

Miscellaneous :

Preliminary Register : Case No. CC /25/2023

Sessions : PW4

Deposition of witness for : Prosecution

Name .. திரு. பார்த்திபன்

Father's Name .. திரு. பச்சைமரத்தான்

Village

Taluk ..

Caste ..

Calling ..

Religion ..

Age .. 42 Date: 02.07.2025

(Solmenly affirmed and oath taken under Act 10 of 1872)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்போது எண்ணூர் தாழங்குப்பம், G பிளாக் என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். சுமார் 2 ½ வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 8.00 மணிக்கு பலகை தொட்டி கோயில் அருகே சாலையின் நடுவில் போலீசார் ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக அந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம்

வரைந்தார்கள். அதில் நான் கையொப்பம்மிட்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்,

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.07.02 14:13:18 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்